ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த
## கண்ணிநுண் சிறுத்தாம்பு

---

### கண்ணிநுண் சிறுத்தாம்புத் தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தவை

அவிதி$_3$தவிஷயாந்தர:
ஶடா$_2$ரே: உபநிஷதா$_3$ம் உபகா$_3$நமாத்ரபோ$_4$க$_3$: |
அபி ச கு$_3$ணவஶாத் ததே$_3$கஶேஷீ
மது$_4$ரகவிர்ஹ்ருத$_3$யே மமாவிரஸ்து ||

வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த *
மாறன் சடகோபன் வண்குருகூர்- ஏறு * எங்கள்
வாழ்வாம் என்று ஏத்தும் மதுரகவியார் * எம்மை
ஆள்வார் அவரே அரண்

---

## மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த
## கண்ணிநுண் சிறுத்தாம்பு

### நம்மாழ்வார் விஷயம்

** கண்ணிநுண் சிறுத் தாம்பினால் * கட்டுண்ணப்
பண்ணிய பெரு மாயன் * என் அப்பனில் **
நண்ணித் தென்குருகூர் * நம்பி என்றக்கால் *
அண்ணிக்கும் அமுதூறும் * என் நாவுக்கே 1

நாவினால் நவிற்று * இன்பம் எய்தினேன் *
மேவினேன் * அவன் பொன்னடி மெய்ம்மையே **
தேவு மற்றறியேன் * குருகூர் நம்பி *
பாவின் இன்னிசை * பாடித் திரிவனே 2

திரிதந்தாகிலும் * தேவ பிரானுடை *
கரிய கோலத் * திரு உருக் காண்பன் நான் **
பெரிய வண்குருகூர் * நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய் * அடியேன் பெற்ற நன்மையே 3

நன்மையால் மிக்க * நான்மறையாளர்கள் *
புன்மையாகக் * கருதுவர் ஆதலின் **
அன்னையாய் அத்தனாய் * என்னை ஆண்டிடும்
தன்மையான் * சடகோபன் என் நம்பியே 4

நம்பினேன் * பிறர் நன்பொருள் தன்னையும் *
நம்பினேன் * மடவாரையும் முன்னெலாம் **
செம்பொன் மாடத் * திருக்குருகூர் நம்பிக்கு
அன்பனாய் * அடியேன் சதிர்த்தேன் இன்றே 5

இன்று தொட்டும் * எழுமையும் எம்பிரான் *
நின்று தன் புகழ் * ஏத்த அருளினான் **
குன்ற மாடத் * திருக்குகூர் நம்பி *
என்றும் என்னை * இகழ்விலன் காண்மினே 6

கண்டு கொண்டென்னைக் * காரிமாறப் பிரான் *
பண்டை வல்வினை * பாற்றி அருளினான் **
எண்திசையும் * அறிய இயம்புகேன் *
ஒண்தமிழ் * சடகோபன் அருளையே 7

அருள் கொண்டாடும் * அடியவர் இன்புற *
அருளினான் * அவ்வருமறையின் பொருள் **
அருள் கொண்டு * ஆயிரம் இன்தமிழ் பாடினான் *
அருள் கண்டீர் * இவ்வுலகினில் மிக்கதே 8

மிக்க வேதியர் * வேதத்தின் உட்பொருள் *
நிற்கப் பாடி * என் நெஞ்சுள் நிறுத்தினான் **
தக்க சீர்ச் * சடகோபன் என் நம்பிக்கு * ஆள்
புக்க காதல் * அடிமைப் பயன் அன்றே 9

** பயன் அன்றாகிலும் * பாங்கல்லர் ஆகிலும் *
செயல் நன்றாகத் * திருத்திப் பணி கொள்வான் **
குயில் நின்றார் பொழில் சூழ் * குருகூர் நம்பி! *
முயல்கின்றேன் * உன்தன் மொய் கழற்கு அன்பையே 10

** அன்பன் தன்னை * அடைந்தவர்கட்கு எல்லாம்
அன்பன் * தென்குருகூர் * நகர் நம்பிக்கு **
அன்பனாய் * மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி * வைகுந்தம் காண்மினே 11

**அடிவரவு:** கண்ணி நாவினால் திரி நன்மையால் நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்க பயன் அன்பன் வாடினேன்

**மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்**